குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.154/2020

அ.சா.1

2023–ம் ஆண்டு அக்டோபர் 06–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ரேவதி | ஜாதி | |
| கணவர் பெயர் | அருணாசலம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 04.36 மணி,

Accused (Dhineshram) present. Advocate Mr. T.Ranganathan present for accused. APP Mr.Suresh Present.

**முதல் விசாரணை.**

1. நான் மைலப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் காயமடைந்து இறந்த அருணாசலம் எனது கணவர். 25.11.2017–ம் தேதி நாங்கள் நடத்தி வரும் தறிக்கு மோட்டார் வாக்குவதற்காக ஓமலூருக்கு இருசக்கர வாகனத்தில் சென்றார். ஓமலூர் பேருந்து நிலையம் அருகே சுகுனா ஓட்டல் அருகே சாலையை கடந்த போது செட்டிப்பட்டி ரோட்டில் இருந்து ஓமலூர் நோக்கி அதிகவேகமாக வந்த இருசக்கர வாகனம் எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும், அதனால் எனது கணவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், 108 ஆம்புலன்ஸின் ஓட்டுநர் மாலை 3.00 மணியளவில் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்.

2. நான் கோகுலம் மருத்துவமனையில் சென்று என் கணவரை பார்த்த போது என் கணவருக்கு தலையில் பலத்த காயம்பட்டும், காலில் மற்றும் நெஞ்சுபகுதியிலும் காயம் ஏற்பட்டு சுயநினைவு இன்றி இருந்தார். அங்கிருந்து நியூரோபவுண்டேசன் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக

26.11.2017–ம் தேதி சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். 27–ம் தேதி காலை 7.45 மணியளவில் சிகிச்சை பலனின்றி எனது கணவர் இறந்து விட்டார்.

3. நியூரோபவுண்டேசன் மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).எனது கணவரின் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN 52 A 6130 ஆகும். ஆஜர் எதிரி தான் அந்த வாகனத்தை சம்பவத்தின் போது ஒட்டி வந்ததாக தெரிந்து கொண்டேன். சம்பவத்தின் போது எனது கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 34 F 1936 ஆகும். 26 மற்றும் 27–ம் தேதி விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

4. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை பற்றி தகவல் தெரிந்து சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். எனது கணவருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை. விபத்து நடந்த இடத்தை ஒருமாதம் கழித்து நான் பார்த்தேன். புகாரை நான் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் எழுதியதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். எனது கணவரின் அஜாக்கிரதையாலும், கவனகுறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 04.50 மணி,

சாட்சி. ரேவதி

ஒம்/–S.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.